# 10 இயேசுவின் திருமுழுக்கு

யூதேயாவின் பெத்லகேம் ஊரில் அவதரித்த குழந்தை இயேசு கலிலேயாவிலுள்ள நாசரேத்து எனும் நகரில் வாழ்ந்து வந்தார். அவர் பன்னிரு வயது வரையில் யூத சமய பாரம்பரியங்களை பின்பற்றி இறைபயத்துடன் பெற்றோரின் அரவணைப்பில் வளர்க்கப்பட்டார்.

முப்பதாவது வயதில் நாசரேத்து நகரிலிருந்து யூதேயா நாட்டின் யோர்தானுக்கு திருமுழுக்கு பெற்று பணியை ஆரம்பிக்க பயணமானார்.





## யோர்தான் ஆற்றில் இடம்பெற்ற நிகழ்வு என்ன?

யோர்தான் ஆற்றங்கரையில் மக்கள் வந்து கூடினர். யோவான் என்பவர் மக்கள் மத்தியில் விசேட பணி ஆற்றிக்கொண்டு இருந்தார். இவர் செக்ரியா மற்றும் எலிசபெத் என்பவர்களது புதல்வர் ஆவார். இறைவனால் ஒப்படைக்கப்பட்டிருந்த மகத்தான பணியை யோவான் செய்தார்.

அவர் இயேசுவின் பணிக்கு வழியை ஆயத்தம் செய்து, மக்களை மனம் திரும்ப அழைத்தார். யோவான் மக்களின் தீய செயல்களை எடுத்துக்கூறி அவர்களது மனதையும் செயல்களையும் மாற்றி, புதுவாழ்வை அடைவதற்கு போதனை செய்தார். அதை ஏற்றுக்கொண்ட மக்கள் புதுவாழ்வின் அடையாளமாக யோர்தான் நதியில் திருமுழுக்கு பெற்றனர். அன்று முதல் யோவான் 'திருமுழுக்கு யோவான்' என அழைக்கப்பட்டார்.

மக்கள் மனம்திரும்பி புதுவாழ்வுக்கு காலடி எடுத்து வைக்க வேண்டும் என்பதே யோவானின் திருமுழுக்கால் வலியுறுத்தப்பட்டது.



படம் 10.1 திருமுழுக்கு யோவான் மக்களுக்கு போதித்தல்

யூத சமூகத்தில் வாழ்ந்த சில குழுவினரிடம் நற்செயல்கள் காணப்படாத காலகட்டத்தில், குரல் கொடுத்த யோவானுக்கு, வெற்றி கரமான மறுமொழி கிடைத்தது குறிப்பிடத்தக்கது ஆகும்.

இயேசு யோவானிடம் திருமுழுக்கு பெற்று தனது பணியை ஆரம்பித்தார். மனம்திரும்பி வாழவேண்டும் என்ற தேவை அவருக்கு இருக்கவில்லை. ஆனால் மக்கள் இறைமகனை அறிந்து மனம்திரும்பி வாழவேண்டும் என விரும்பினார்.

**இயேசுவின் திருமுழுக்கு நிகழ்வை திருவிவிலியத்திலிருந்து வாசிப்போம்.**

***''அவர் ஆற்றிலிருந்து கரையேறிய உடனே வானம் பிளவுபடுவதையும் தூய ஆவி புறாவைப்போல் தம் மீது இறங்கி வருவதையும் கண்டார். அப்பொழுது ''என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்'' என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.***

**மாற்கு : 1 : 10 -11**



படம் 10.2 இயேசுவின் திருமுழுக்கு

இயேசுவின் திருமுழுக்கு நிகழ்விலிருந்து வெளிப்படுவன:-

- ★ இயேசு இறைவனின் அன்பான மகன்.
- ★ தந்தையாகிய கடவுள் பூரிப்படைந்தார்.
- ★ தூய ஆவி புறா வடிவில் இறங்கியது.

இயேசு தூய ஆவியால் நிரப்பப்பட்டு, தூய ஆவியின் வழிகாட்டலுடன் பணியை ஆரம்பித்து இறைவிருப்பத்துக்கு கீழ்படிந்து, இறைமகனாக இவ்வுலகில் பணியை ஆரம்பித்தார்.

இயேசுவின் திருமுழுக்கு நிகழ்வில் தூய ஆவியை அறிந்து கொள்வோம்.

***மனனவசனம்:***

***உரோமையர் 3: 23-24***

**ஏனெனில் எல்லோருமே பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்து போயினர். ஆயினும் அனைவரும் கிறிஸ்து இயேசு நிறைவேற்றிய மீட்புச் செயலின் மூலம் கடவுளுடைய அருளால் இலவசமாய் அவருக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படுகின்றனர்.**

**உரோமையர் 3: 23-24**

செயற்பாடு

1) 'அ' பகுதியை 'ஆ' பகுதியுடன் இணையுங்கள்

| (அ) | (ஆ) |
|---|---|
| யோர்தான் ஆறு | யோவானின் போதனை |
| இயேசுவின் திருமுழுக்கில் புறா | இயேசு |
| மக்களின் மனம் திரும்புதல் | மக்கள் பெலனடைதல் |
| இறைவனின் அன்பான மகன் | இயேசுவின் திருமுழுக்கு |
| தூய ஆவியின் வல்லமை | தூய ஆவியின் அடையாளம் |

2) திருமுழுக்கு யோவான் தனது போதனையால், மக்களை ஆயத்தம் செய்த வழிமுறைகளைக் குறிப்பிடுக.